IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

அசல் வழக்கு எண். 126/2019

சாட்சி : PW– 3

பெயர் : திரு. கிருஷ்ணன் தேதி : 15.11.2024

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை )

**குறுக்குவிசாரணை**:– (13 வது பிரதிவாதி தரப்பில்)

பூவி என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளித்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி அழைப்பாணை வரவில்லை. பூவி என்பவர் சாட்சி சொல்ல அழைத்தார். மொத்தம் எத்தனை சர்வே நெம்பர் சம்மந்தமாக வழக்கு போடப்பட்டுள்ளது என்று தெரியாது. ஆனால் இவ்வழக்கு 16 ஏக்கர் பூமி சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முத்துகவுண்டர் என்பவருக்கு சேப்பெருமாள் மற்றும் ஆனைகவுண்டர் என்ற இரண்டு மகன்கள். முத்துகவுண்டரின் இரண்டு மகன்கள் சொத்துக்களை 27.08.2010ம் தேதி பாகம்பிரித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்துக்களிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் நான் குடியிருக்கிறேன். நான் ஒரு குற்ற வழக்கில் சிறையில் இருந்தேன். நான் கொலை வழக்கில் சிறையில் இருந்தேன். என்னுடைய சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு 14 நபர்கள்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த 14 நபர்களின் விவரம் எனக்கு தெரியாது. ஆனைகவுண்டர் என்பவருக்கு 2 மகன்கள் மற்றும் ஒரு மகள். ஆனைகவுண்டர் என்பவர் மகன்கள் மற்றும் மகளுடன் சேர்ந்து 06.08.2018ம் தேதி 13 வது பிரதிவாதிக்கு சொத்தை விற்றுள்ளனர் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சந்திரன் என்பவர் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் அவர் பற்றி எனக்கு தெரியாது. சந்திரன் வீடுகட்டி குடியிருப்பதால்தான் அவரையும் சேர்த்து

இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு பற்றியும், தாவா சொத்துக்கள் சம்மந்தமாகவும் எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.